No. of Printed Pages : 8

5216900 8301

பதிவு எண் | 1 | 2 | 0 | 1 | 1 | 9 | 7 |

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் :

(அ) தொல்காப்பியம் (ஆ) யாப்பருங்கலக்காரிகை

(இ) நன்னூல் (ஈ) தண்டியலங்காரம்

2. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞரைக் கண்டுபிடிக்க.

தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்.

(அ) மறைமலை அடிகள் (ஆ) தமிழ் ஒளி

(இ) சூடாமணி (ஈ) கோதை

3. ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே'' - இந்நூற்பா இடம்பெற்றுள்ள இலக்கண நூல் :

(அ) தொல்காப்பியம் (ஆ) நன்னூல்

(இ) இலக்கண விளக்கம் (ஈ) அகத்தியம்

[ திருப்புக

4. உலகநாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது :

(அ) காலநிலை மாறுபடுகிறது

(ஆ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

(இ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

(ஈ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

5. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | (i) | சேர்ந்தாரைக் கொல்லி |
| (2) | பயன்தூக்கார் செய்த உதவி | (ii) | ஞாலத்தின் மாணப்பெரிது |
| (3) | சினம் | (iii) | தெய்வத்துள் வைக்கப்படும் |
| (4) | காலத்தினாற் செய்த நன்றி | (iv) | நன்மை கடலின் பெரிது |

(அ) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

6. ''எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது :

(அ) தாய்வழிச் சமூகமுறை (ஆ) தனிக்குடும்ப முறை

(இ) தந்தைவழிச் சமூகமுறை (ஈ) விரிந்த குடும்ப முறை

7. ''காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை''
- இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் :

(அ) இசைக்கருவி (ஆ) போர்க்கருவி

(இ) வேளாண் கருவி (ஈ) தச்சுக்கருவி

8. ''காலை இளம் வெயில்
நன்றாக மேய
தும்பறுத்துத்
துள்ளிவரும்
புதுவெயில்'' - என்ற கவிதையில் பயின்றுவரும் படிமம் :

(அ) மெய்ப்படிமம் (ஆ) பயன் படிமம்

(இ) உருப்படிமம் (ஈ) வினைப்படிமம்

9. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

வானம் அழுகிறது

பூமி சிரிக்கிறது

----------

(அ) ஒளி (ஆ) மேகம் (இ) மின்னல் (ஈ) மழை

10. மேடையின் மேலிருந்து வேண்டும்போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படும் திரை :

(அ) இரு முகத்திரை (ஆ) கரந்துவரல் திரை

(இ) பொருமுகத்திரை (ஈ) ஒரு முகத்திரை

11. ''மழை மேகத்தைக் கண்ட மயில் போல

நீலவண்ணனைக் கண்ட குந்தி'' - இத்தொடரில் வெளிப்படும் மெய்ப்பாடு :

(அ) பெருமை (ஆ) சிரிப்பு (இ) மகிழ்ச்சி (ஈ) வியப்பு

12. காப்பியத்தின் பெரும்பிரிவைக் குறிப்பது :

(அ) சருக்கம் (ஆ) காதை (இ) இலம்பகம் (ஈ) காண்டம்

13. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

(அ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.

(ஆ) கர்ணன் தோற்றான் போ.

(இ) இந்தா போறான் தருமன்.

(ஈ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்!

14. ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது :

(அ) வாகைத்திணை (ஆ) பாடாண் திணை

(இ) காஞ்சித்திணை (ஈ) பொதுவியல் திணை

[ திருப்புக

25. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது ? அதற்கான இலக்கண விதி யாது ?

26. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
1. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
2. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

27. ஏதேனும் ஒரு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
(அ) வெங்காயம் (ஆ) அந்தமான்

28. கலைச்சொல்லாக்கம் தருக.
(அ) Artist (ஆ) Subscription

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
ஊட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) அருங்கானம் (ஆ) ஏழையென

30. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) சாற்றி (ஆ) தொழுதனர்

## பகுதி - III
## பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி,
'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

32. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

33. சிரிப்பு, சினம், வியப்பு, அச்சம் ஆகியவற்றுள் எவையேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

[ திருப்புக